தேதி.01.09.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No. 10/2020 திரு.செல்வராஜ், த/பெ.அம்மாசைக்கவுண்டர் வா.சா.2

<u>வா.சா.2: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வாதிக்கு நான் என்ன உறவு முறை என்றால் பழக்கமானவர். எவ்வாறு பழக்கம் என்றால் பக்கத்துவீட்டிற்கு அடிக்கடி வருவார் அவ்வாறு பழக்கம் ஏற்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 மற்றும் 1ம் வாதியின் சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும் உள்ள 1ம் வாதியின் கையெழுத்தில் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆன கடனுறுதி சீட்டில் நான் தான் சாட்சி கையெழுத் துசெய்தேன் என்றால் சரிதான். அதிலுள்ள விவரங்களை படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன். அதிலுள்ள கடன் தொகை எண்ணால் எழுதப்பட்டுள்ளதா அல்லது எழுத்தால் எழுதப்பட்டுள்ளதா என்றால் எண்ணால் எழுதப்பட்டுள்ளது. வாதிக்–கு தொகை எவ்வாறு வந்தது என்று என்னிடம் கூறினாரா என்றால் கூறவில்லை அதைப்பற்றி நானும் கேட்கவில்லை. பிரதிவாதி வா.சா.ஆ.1ல் இங்க் பேனாவில் கையெழுத்து செய்தாரா அல்லது பால் பாயிண்ட் பேனாவில் கையெழுத்து செய்தாரா என்றால் நினைவில் இல்லை. பிரதிவாதி எங்கு வேலை செய்கிறார் என்றால் மின்சாரத்துறையில் இருந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டார். பிரதிவாதிக்கு எவ்வளவு சம்பளம் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வாதிக்கு என்ன வயது என்றால் 80 வயதிருக்கும். எந்த தேதியில் கடன் கொடுத்தார் என்றால் 15.03.2018ம் தேதி ஆகும். கடனுறுதி சீட்டு எப்போது கொடுத்தார்

என்றால் அன்றைய தினமே கொடுத்துவிட்டார். வா.சா.ஆ.1ல் பிரதிவாதி கையெழுத்து செய்தாரா அல்லது கைரேகை வைத்தாரா என்றால் கையெழுத்து செய்தார். கைரேகை வைக்கவில்லை. பொதுவாக கடனுறுதி சீட்டில் தனியாக காலம் உள்ள விவரம் தெரியுமா என்றால் இல்லை. கைரேகை வைக்காததால் அந்த கடனுறுதி சீட்டு செல்லாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி பணத்தை வங்கியிலிருந்து கொடுத்தாரா அல்லது வீட்டிலிருந்து கொடுத்தாரா என்றால் வீட்டில் இருந்து எடுத்துக்கொடுத்தார். வாதிக்கு பணம் எவ்வாறு வந்தது என்ற விவரம் தெரியுமா என்றால தெரியாது. மேற்படி தொகையானது என்னவகையான நோட்டுக்கள் என்றால் இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள். வா.சா.ஆ.2ல் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையது தான். அதை நான் படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது பக்கத்து வீட்டுக்காரர். பணம் கொடுக்கும்போது வாதியின் வீட்டில் யார் இருந்தார்கள் என்றால் நான், பணம் கொடுத்தவர், வாங்கியவர் மற்றும் பணம் கொடுத்துவரின் மனைவி ஆகியோர்கள் இருந்தோம். பிரதிவாதி என்ன காரணத்திற்காக பணம் கேட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. பிரதிவாதி என்ன காரணத்திற்காக பணம் வாங்கினார் என்ற விவரத்தை வாதி என்னிடம் தெரிவித்தாரா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு மாத வருமானம் ஒரு லட்சம் பெறக்கூடியவர் என்றால் அது பற்றி எனக்குதெரியாது. பிரதிவாதியின் மனைவியும் பள்ளி ஆசிரியை என்றும் அவரும் நல்ல சம்பளம் ஈட்டக்கூடியவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி மாதம் வருமானம் ஒரு லட்சம் பெறக்கூடியவர் என்பதாலும், பிரதிவாதியின் மனைவியின்

வருமானம் வருவதாலும், பிரதிவாதி கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வாதி பழனிச்சாமி சொல்லி தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். கடனுறுதி சீட்டை யார் வாங்கி கொடுத்தார்கள் என்றால் செல்வராஜ் வாங்கி கொடுத்தார். செல்வராஜ் தான் கடனுறுதி சீட்டை வாங்கி வந்தார் என்ற விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் கையில் வைத்திருந்தார் என்பதால் தெரியும். வாதி கேட்டுக்கொண்டதின்பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.